BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# மாநகர தரவுகளுக்கான சர்வதேச கவுன்சில் வழங்கும் பிளாட்டினம் நிலை ISO தரவுகள் சான்றளிப்பினை ப்ராம்ப்ட்டன் நகரம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டிலும் பெறுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 13, 2021) –இன்றைய தினம், ப்ராம்ப்ட்டன் நகரம் பிளாட்டினம் நிலை ISO 37120 சான்றளிப்பினை பெற்றதாக, மாநகர தரவுகளுக்கான சர்வதேச கவுன்சில் (WCCD), அறிவித்தது; முடிவுகளை திறம்பட மேற்கொள்வதற்காக உபயோகிக்கப்படும் தரவுகளை சேகரிப்பதில், பகிர்வதில் மற்றும் உபயோகிப்பதில் உயரிய தரம் கொண்டிருப்பதற்காக இது வழங்கப்படுகிறது

உலகெங்கிலுமாக, WCCD ISO 37120 பிளாட்டினம் நிலை சான்றளிப்பினை பெற்ற 35 நாடுகளில் உள்ள 100 மாநகரங்களுக்கும்- இவற்றில் 30 நகரங்கள் கனடாவில்- மேலாக இருக்கும் ஒரு நெட்வொர்க்கிற்கு WCCD நமது நகரம் சேர்கிறது; இந்த நகரங்கள் முடிவுகளை திறம்பட மேற்கொள்வதற்காக உபயோகிக்கப்படும் தரவுகளை சேகரிப்பதில், பகிர்வதில் மற்றும் உபயோகிப்பதில் ஈடுபடுகின்றன. 104 குறிப்பு காட்டிகளில் 90க்கும் மேலான குறிப்புகாட்டிகள் WCCD யின் ISO 37120 தரநிலைகளுக்குள்ளாக இருக்கின்றன என நகர நிர்வாகம் தெரிவித்தது. இது, கனடா நாட்டின் அரசாங்கம் ஆதரவளிக்கின்ற கனடா நாட்டு நகரங்களின் திட்டங்களுக்கான தரவுகளின் [Data for Canadian Cities Project (DCCP)] ஒரு அங்கமாகும்.

WCCD குளோபல் நெட்வொர்க்கின் உறுப்பினராக இருக்கும் இந்த நகரமானது, சேவைகளை மேம்படுத்துவதற்கும், குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், உலகெங்கிலும் தரவுகளால் உந்தப்படும் பிற நகரங்களுக்கு நிகராக, உள்ளூர் அனுபவங்களையும் அளவுகோல்களையும் பகிர்ந்து கொள்ளும். தனது WCCD குளோபல் நெட்வொர்க் கூட்டாளர்களுடன் சேர்ந்து, ஒரு புத்திசாலித்தனமான, நிலைத்து நிற்கவல்ல, நெகிழ்திறன் கொண்ட, வளமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை தொடர்ந்து கட்டமைப்பதற்காக, சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் குறிகாட்டிகளை ப்ராம்ப்ட்டன் நகரம் அளவிடும்.

மாநகர தரவுகளுக்கான சர்வதேச கவுன்சில் (WCCD), மற்றும் சான்றளிப்பு பற்றி மேலும் அறிந்துகொள்ள வருகை தரவும்: www.dataforcities.org..

**கனடா நாட்டு நகரங்களுக்கான தரவுகள் பற்றி**

உயர் திறன், ஒப்பிடக்கூடிய மற்றும் சுயாதீனமாக சரிபார்க்கப்பட்ட நகராட்சி தரவுகளை, கனடா நாடெங்கிலுமாக உள்ள நகராட்சித் தலைவர்களுக்கு கொண்டு சேர்க்கின்ற இந்த கனடா நாட்டு நகரங்களின் திட்டங்களுக்கான தரவுகள் [Data for Canadian Cities Project (DCCP)] , மாற்றம் உண்டாக்கக்கூடிய, மூன்று ஆண்டுக்கால, கனடா நாடு முழுவதிலுமாக அமலாகவிருக்கும் திட்டம் இதுவாகும்; தற்போது நாடு முழுவதும் தரவுகளால் உந்தப்படுகின்ற பதினைந்து நகராட்சிகளில் இது நடந்து வருகிறது. மத்திய உள்கட்டமைப்பு மற்றும் சமூகங்களுக்கான அமைச்சகத்தால் ஆதரிக்கப்படுகின்ற இந்த திட்டமானது, நகராட்சித் தலைவர்களுக்கு முக்கியமான முடிவுகளை எடுக்கத் தேவையான தரவுகளை வழங்குகிறது; அதே சமயத்தில் உள்ளக அடிப்படை தரம் குறித்தலையும் பலப்படுத்துகிறது; மேலும் கனடா முழுவதும் உள்ள முப்பது நகரங்களுடனும் உலகளவில் நூறு நகரங்களுடனும் அங்கு இருக்கின்ற வலுவான, உயர்நிலைக் குறிகாட்டிகளுடன் ஒப்பீடு செய்து செயல்படுத்துகிறது. நிலைத்து இருக்கவல்ல வளர்ச்சியை வலுப்படுத்துவது முதல், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவது , மற்றும் காலநிலை மாற்றங்களுக்கான நோக்கங்களை அடைவது வரை, மற்றும் முக்கியமான முதலீட்டு முடிவுகளை அறிவிப்பது வரை, புத்திசாலித்தனமான, நிலைத்து நிற்கவல்ல, நெகிழ்திறன் கொண்ட, வளமான, மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்கத் தேவையான தரவுகளை, நாடு முழுவதும் உள்ள நகராட்சியில் முடிவெடுப்பவர்களுக்கு கனடா நாட்டு நகரங்களின் திட்டப்பணிகளுக்கான தரவுகள் வழங்குகின்றன .

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் நன்கு நிர்வாகம் செய்யப்பட்டு வரும் நகரமாகும், இதில் நாங்கள் பாதுகாப்பான, நிலைத்துநிற்கவல்ல மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வெற்றிகரமான ஒரு சமுதாயத்தை உருவாக்குகிறோம். தரவுகளால் உந்தப்படும் முடிவுகளை மேற்கொள்வதன் மூலமாக, குடியிருப்புவாசிகளுக்கு வாழ்க்கைத் தரத்தை தொடர்ந்து மேம்படுத்தி வருகிறோம். WCCD யினால் ISO 37120 பிளாட்டினம்-நிலை சான்றிதழை இரண்டாவது வருடமும் தொடர்ந்து பெற்றதாக அங்கீகாரம் பெற்றமைக்காக பெருமை கொள்கிறோம்; மேலும் எங்கள் உள்ளூர் அனுபவங்களை WCCD உலகளாவிய நெட்வொர்க்குடன் பகிர்ந்து கொள்வதை எதிர்நோக்குகிறோம்; கூடவே இதர நகரங்களிலிருந்தும் கற்றுக்கொண்டு, நமது குடியிருப்புவாசிகளுக்கும் கனடா நாடு முழுமையிலும் இருப்பவர்களுக்கும் பலனளிக்கும் வகையில் பகிர்ந்து கொள்வோம்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், பராம்ப்ட்டன் நகரம்*

“எங்கள் குடியிருப்பாளர்களுக்கான பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு தரவுகள் இன்றியமையாதவையாகும்; மற்றும் உயரடுக்கு WCCD உலகளாவிய நெட்வொர்க்கின் ஒரு பகுதியாக, ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள் மற்றும் கனடா முழுவதும் உள்ள மக்களின் வாழ்க்கையை

மேம்படுத்துவதற்காக மற்ற தரவுகளால் உந்தப்பட்ட சமூகங்களிலிருந்து கற்றுக்கொள்ள நாங்கள் ஒத்துழைக்கவும் மற்றும் அளவுகோலாக இருக்கவும்  இயலுகிறது. ப்ராம்ப்ட்டன் நகரம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக உலகத் தரவுகளுக்கான உலக கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்டதில் பெருமிதம் கொள்கிறது; மேலும் நமது நிலைத்திருக்கும் தன்மை மற்றும் உள்கட்டமைப்பை தொடர்ந்து மேம்படுத்துவோம் மற்றும் சான்றுகள் அடிப்படையிலான முடிவெடுப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்போம்"

- *- ஹர்கிரத் சிங், தலைமைப் பொறுப்பு, பெருநிறுவன சேவைகள்; நகர கவுன்சிலர், வார்டுகள் 9 & 10, ப்ராம்ப்ட்டன் நகரம்*

""ப்ராம்ப்ட்டன் நகரம் தனது கவுன்சில் கால முன்னுரிமை விஷயங்களை மேம்படுத்துவதற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது: ப்ராம்ப்ட்டன் ஒரு நன்கு இயங்கும் நகரம், - இது WCCD யால் ISO 37120 பிளாட்டினம்-நிலை சான்றிதழை தொடர்ந்து இரண்டு வருடங்களாகப் பெற்றதன் மூலம் தெளிவாகிறது - நாங்கள் தொடர்ந்து புதுமை படைத்தல் மற்றும் தரவுகளால் உந்தப்படும் முடிவெடுப்பதில் உலகளாவிய முன்னணியாளர் என்று அங்கீகரிக்கப்படுகிறோம். எங்கள் குழுவினர் எங்கள் குடியிருப்பாளர்களுக்கு பாதுகாப்பான, நிலைத்து இருக்கவல்ல மற்றும் வெற்றிகரமான நகரத்தை உருவாக்க தொடர்ந்து பாடுபட்டு வருகின்றனர், மேலும் ஒத்துழைப்புக்காகவும் எங்கள் கூட்டாண்மைகளை மேம்படுத்துவதன் மூலமும் சான்றுகள் அடிப்படையிலான முடிவுகளை எடுப்பதன் மூலமும் அதை தொடர்ந்து செய்வார்கள்.

- - டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்

"WCCD சார்பாக,  பிளாட்டினம் மட்டத்தில் WCCD ISO 37120 உயாறிய சான்றிதழை ப்ராம்ப்ட்டன் நகரம் இரண்டாம் ஆண்டிலும் பெற்றமைக்காக வாழ்த்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அனைத்து ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களுக்கும் நிலைத்து நிற்கவல்ல, நெகிழ்ச்சியான, வளமான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் புத்திசாலித்தனமான எதிர்காலத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான தனது அர்ப்பணிப்புக்காக ப்ராம்ப்ட்டன் உலகளாவிய ரீதியில் 100 WCCD நகரங்களின் குழுவில் தனித்து நிற்கிறது. கனடா நாட்டு நகரங்களின் திட்டப்பணியின் அங்கமாக இந்த சாதனை புரிந்தமைக்காக  மேயர் ப்ரவுன், தலைமை நிர்வாக அதிகாரி டேவிட் பேர்ரிக், நகர சபை மற்றும் அதன் அலுவலர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். இந்த வருடாந்திர தரவுகளை நீங்கள் தொடர்ந்து தெரிவித்து, உங்கள் நகரம் முழுவதும் குடியிருப்பாளர்களுக்கான மாற்றத்திற்கான உந்துதல் கொடுப்பதற்காக அவற்றைப் பயன்படுத்துவதில் WCCD உங்களுடன் இணைந்து வேலை செய்ய நிற்கிறது; அதே சமயத்தில் உங்கள் உன்னதமான முன்னேற்றத்தை கண்காணித்தபடியும் இருக்கும்.

- *- டாக்டர் பேட்ரிசியா மெக்கார்னீ, தலைவர் மற்றும் தலைமை செயல்பாட்டு அதிகாரி,* WCCD

BRAMPTON

Media Release

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.


**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca